# நல்லாட்சி

**சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா**

**தமிழாக்கம்: எஸ்.சிவகுருநாதன்**

வெளியீடு - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

# நல்லாட்சி

## 1. அறிமுகம்

“நாட்டு நடப்பு எப்படி?”

“நாடு நல்லதாயின் நடப்பு நல்லாயிருக்கும்”

“நாடு நல்லாயிருக்க நல்ல அரசாங்கம் இருக்க வேணும்”

“நல்ல அரசாங்கம் அமைய நல்ல மனிசர் இருக்க வேணும்”

“அப்படியெண்டால் எங்கிருந்து தொடங்குவது?”

“நல்ல மனிசர் கொஞ்சப்பேராவது குரல் எழுப்ப வேணும்”

“கொஞ்சப்பேரின் குரலுக்கு இடமில்லாட்டி?”

“நம்பிக்கையைக் கைவிடக்கூடாது”

“என்ன நம்பிக்கை?”

“ஒவ்வொரு கூடாத மனிதனுக்குள்ளும் ஒரு நல்ல மனிதனும் இருப்பான்”

“அந்த நல்ல மனிதன் நித்திரையில் ! கூடாத மனிதன் விழித்திருக்கிறான்.”

“அந்த நல்ல மனிதனை விழித்தெழச் செய்வோம்”

“அப்போது இருவருக்கிடையில் மோதல்”

“இது தான் நல்லாட்சியின் ஆரம்பம்”

“அப்போது தான் நல்ல அரசாங்கங்கள் உருவாகும்”
“ஆம் அது சுபீட்சமான நாட்டுக்கு வழி வகுக்கும்”

“அத்தகைய நாட்டில் வாழ்வது மகிழ்ச்சிகரமானது”

## 2. ஊழல் மோசடி இல்லாத ஆட்சி

“நல்ல நாடும் நல்ல ஆட்சியும் நல்ல மனிதர்களும் வாழும் நாட்டிற்குத் தேவை என்ன?”

“அனைத்து நல்ல அம்சங்களும் இருக்க வேண்டும், சகல கூடாதவையும் இல்லாதொழிய வேண்டும்”

‘அதற்கு என்ன செய்யலாம்?”

“அரசாங்கமும், மனிதர்களும், அனைத்து நடவடிக்கைகளும் ஊழல்கள் இன்றி அமைதல் வேண்டும்”

“இத்தகைய கதைகளை தினசரி நாம் கேட்கின்றோம்”

“நாம் பழைய நாட்டார் கதையிலிருந்து ஆரம்பிப்போம்.”

“நல்லது இப்பூர்வீகக் கதைகள் இன்றும் புதியவை”

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். ராஜா குடிமக்களை நேசித்தார். ஒரு நாள், சில தகவல்களை அறிய தன்னை சந்திக்குமாறு ஒரு விவசாயிக்கு அழைப்பு விடுத்தார்.

அரசனைச் சந்திக்க வெறுங்கையோடு போவது கூடாது என எண்ணி, தனது தோட்டத்திலிருந்து ஒரு சில காய்கறிகளை எடுத்துச் செல்ல விவசாயி நினைத்தான். ஆனால், தோட்டத்தில் இருந்து எட்டு கத்தரிக்காய்களை மாத்திரமே அவன் எடுத்தச் செல்ல முடிந்தது. எவ்வாறாயினும் எட்டு கத்தரிக்காய்களை எடுத்துக்கொண்டு அரச மாளிகைக்கு விவசாயி புறப்பட்டான். அரச மாளிகையின்

முதல் வாசலில் காவலுக்கிருந்த காவலாளி விவசாயியை சும்மா போகவிட முடியாது என்று கூறினான். விவசாயி தனது நிலைமையை விளக்கிக் கூறி, தான்

கொண்டு வந்த கத்தரிக்காய்களில் ஒன்றை அக்காவலாளியிடம் கொடுத்தான். ஒன்பது வாசற் கதவுகளில் இன்னும் எட்டுக் கதவுகளை அவன் தாண்டிச் செல்ல வேண்டும். எஞ்சிய ஏழு வாசற் கதவுகளிலும் முன்னர் போலவே வாயிற் காவலர்களுக்கு ஒவ்வொரு கத்தரிக்காயை வழங்கிவிட்டு விவசாயி ஒன்பதாவது வாயிற்கதவை அடைந்தான். அவனிடம் ஒரு கத்தரிக்காயும் இருக்கவில்லை. விவசாயி தனது நிலைமையை எடுத்துக் கூறினான். அப்போது ஒன்பதாவது வாயிற்காவலன் பின்வருமாறு கூறினான்: “நல்லது, அரசரிடம் உமக்குக் கிடைக்கும் பரிசுகளில் எனக்கு அரைப்பங்கை கொடுக்கச் சம்மதித்தால் வழி விடுகின்றேன்”

விவசாயி அதற்கு உடன்பட்டு 9வது வாயிற்கதவைக் கடந்து அரசனை சந்தித்தான். விவசாயியிடம் தகவல்களை அறிந்து மகிழ்ச்சியடைந்த அரசன் “நீ விரும்பியதைக் கேள்” என்றான். விவசாயி விடுத்த வேண்டுகோளைக் கேட்டு அரசன் ஆச்சரியம் அடைந்தான்.

## குற்றத்திற்கான தண்டனை

“எனக்கு நூறு கசையடி கொடுங்கள்” விவசாயி கூறினார்.

“ஏன் என அரசன் கேட்டான்”

“எட்டு கத்தரிக்காய் இலஞ்சம்” என விவசாயி கூறினான்.

“எனக்குப் புரியவில்லை” அரசன் பதிலளித்தான்.

“விவசாயி எட்டுக் கத்தரிக்காய்களைக் கொண்டு வந்து, எட்டு வாயிற்காவலர்களுக்கு இலஞ்சம் கொடுத்து தான் அரச மாளிகையினுள் நுழைந்த கதையைக் கூறினான். தனக்குக் கிடைக்கும் பரிசில் அரைவாசிப் பங்கைத் தருவதாக உறுதியளித்தே 9வது வாயிற்கதவைத் தாண்டி வந்த கதையையும் கூறினான்.

“ஒன்பது வாயிற் காவலர்களுக்கு நூறு சவுக்கடி வீதம் வழங்கி அரச சேவையிலிருந்து அவர்களை நீக்கினான்.

“இக்கதையிலிருந்து கற்கும் படிப்பினை யாது?”

“ஆட்சியாளன் ஊழல் பேர்வழிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும்” என்பதாகும்.

“ஆட்சியாளனும் ஊழல்பேர்வழி என்றால்?”

“அவ்வாறாயின் தண்டனை பெறுவது விவசாயியே”

இன்று தண்டனை பெறுவது வெகுசன ஊடகங்களே”

“எனவே ஒரு வாயால் மாத்திரமல்ல நூறு வாய்களால் இதனை அம்பலப்படுத்த வேண்டும்”

“அரசாங்கத்தின் ஊழல் மாத்திரமா?”

“இல்லை, வியாபாரி முதற்கொண்டு எல்லோரது ஊழல்களும் அம்பலப்படுத்தப்பட வேண்டும்”

பொதுமக்களின் ஊழல்கள்?

“ஆம், ஊழல்களைக் கண்டும் காணாதது போல் அமைதியுடன் இருத்தலும் ஊழலே என நாட்டுக்கு உரத்துக் கூற வேண்டும்.”

# 3. சட்டத்திற்கு முதலிடம்

“முன்னர் நாட்டின் முதல்வர் அரசராவார்”

“ஜனநாயக யுகத்தில் முதல்வர்கள் பொது மக்களே”

“அனைத்து மக்களும் அவ்வாறு முதல்வர்களாகச் செயற்பட முடியாது”

“எனவே சட்டத்திற்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும்”

“இப்படிச் சொன்னாலும் தனிநபர்களே முதன்மை பெற்றுள்ளார்கள்”

“இதனாலேயே தனிநபரைவிட சட்டத்தை முதன்மைப்படுத்தும் ஜனநாயக முறையை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

“இதை எப்படிச் செய்வது?”

“தனிநபரை விட சட்டத்திற்கு அமைய செயற்பட வேண்டும்”

“சட்டத்தை விஞ்சி தனிமனிதன் செயற்படக் கூடாது.”

“ஆனால் அதிகாரத்தைக் கைப்பற்றியதும் தனிநபர் சட்டத்தைக் கையில் எடுப்பார்”

“எனவே சட்டத்தைக் கையில் எடுக்காத வகையில் தனிநபரை நியமித்தல் வேண்டும்”

“இவ்வாறு நினைத்துக் கொண்டு தான் அதிகாரம் வழங்கப்படுகிறது. ஆனால், அதன் பின்னர் நிலைமை மாறுகிறது.”

“ஜனநாயக முறையைவிட தனிநபர் மீது நம்பிக்கையை வைப்பதாலேயே இவ்வாறு நிலைமை மாறுகிறது.

“அப்படியென்றால் தனிநபரின் செல்வாக்கு இன்றி செயல்முறையை எப்படி நடைமுறைப்படுத்துவது?”

“இச்செயல்முறையை நடைமுறைப்படுத்துகையில் தனிநபரை மாற்றியமைக்கும் ஒரு நடைமுறையும் இருத்தல் வேண்டும்”

“நல்லது ‘கெகில்லே’ அரசன் வழங்கிய தீர்ப்பு நியாயமானதா?

“எப்படி நியாயமாகும். அரசனுடைய அபிப்பிராயமே அமுலாக்கப்பட்டது.

“எனவே, அரசனை மாற்ற முடியுமா? அன்று அது சாத்தியப்படாமல் இருக்கலாம். ஆனால், இன்றைய நிலைமை வித்தியாசம்.”

# 4. சட்டம் இல்லாதபோது மனிதன் கொடூரமானவனாகின்றான்

“நாம் இன்றைக்குப் பொறுத்தமான உதாரணத்தை எடுப்போம்.”

ஒரு மனிதனுக்கு அநீதி ஏற்படும் போது அவன் அதுபற்றி பொலிசாரிடம் முறையிடுவான். அங்கு ஒன்றில் முறைப்பாடு உரிய முறையில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அல்லது முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டு விசாரணை மேற்கொள்ளப்படுவதில்லை. விசாரணை மேற்கொள்ளப்பட்டாலும் போதியளவு விசாரணை மேற்கொள்ளப்படுவதில்லை.”

எனவே, நியாயத்தை நாடுவதற்காக இம்முறைப்பாடு சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்படுகிறது.

சட்டமா அதிபர் பின்வருமாறு கூறுகின்றார்: “பொலிசார் அவசியமான சான்றாதாரங்களைச் சமர்ப்பிக்கப்படாதபடியால் வழக்குத் தொடர முடியாது.” அதன் பின்னர் பாதிக்கப்பட்ட நபர் முறைப்பாட்டை நீதி மன்றத்திடம் சமர்ப்பிக்கின்றார். நீதிமன்றம் பின்வருமாறு கூறுகிறது:

“சட்டமா அதிபர் சார்பில் வழக்குத் தொடராதபடியால், நீதிமன்றம். ஒன்றுமே செய்ய முடியாது. அல்லது இவ்வாறு கூற முடியும். “சட்டமா அதிபர் சார்பில் வழக்குத் தொடரப்பட்டாலும் போதிய சான்றாதாரங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் வழக்கு முன்னெடுக்கப்படமாட்டாது.”

“இம் முறையால் பாதிக்கப்பட்டவருக்கு நியாயம் கிடைக்காது. இந்நிலையில் என்ன நடக்கும்? சட்டம் புறக்கணிக்கப்பட்ட நிலை விரிவடையும். ஒரு நாட்டில் சட்டமற்ற நிலை ஏற்பட்டால் என்ன நடக்கும்?

“அப்போது மனிதர்கள் சட்டத்திற்குப் புறம்பான தண்டனை முறைகளில் நம்பிக்கை வைப்பர். குற்றச் செயல்களும் வன்முறைச் சம்பவங்களும் அதிகரிக்கும்

அப்போது சமூகத்திற்கு என்ன நடக்கும்?

“சட்டம் மீதான நம்பிக்கை இல்லாதொழிக்கப்படும் ஒழுக்க நெறிமுறைகளில் சீரழிவு ஏற்படும்.”

“எனவே, இப்படியானதொரு நிலைமையின் கீழ் தனிநபரை மாற்றுவதன் மூலம் பயன் கிட்டுமா?”

“உண்மை, இங்கு தனி நபரையும் முறைமையையும் மாற்றியமைக்கும் சட்டம் இருக்க வேண்டும்”

“எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை விஞ்சி தனிநபருக்கு செயற்பட இடமளிக்கக் கூடாது.”

# 5. மக்களின் ஆட்சி

“சாதாரண மனிதனின் விருப்பம் யாது?”

“உணவு, உடை, வீடு, சுகாதாரம், கல்வி என்பவற்றை நியாயமான முறையில் பெற்று நல் வாழ்க்கை வாழ்வதாகும்”

“இவை அனைத்தையும் எவ்வாறு பெறுவது?”

நல்லாட்சி இன்றி இந்த மனித உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது?

“நல்லாட்சியின் மூலம் இவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது?”

“கொள்கைகள், சட்டவாக்கத் திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், வரவு -செலவு ஒதுக்கீடு, செயற்திறன் என்பவையே நல்லாட்சி எனப்படும்.”

“நல்லாட்சி என்றாலும் அவற்றைச் செய்யும் ஒரு கிரமமான முறை இருக்க வேண்டும் அல்லவா?”

“உண்மை, இங்கு அரசுக்கும் குடிமகனுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்”

“இவ்வுறவை ஏற்படுத்துவது எப்படி?”

“மனித உரிமைகளைப் பேணுதல், சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாத்தல், வெளியீட்டுச் சுதந்திரத்தையும், ஊடக சுதந்திரத்தையும் மதித்தல், பேணுதல் அதிகார வேறாக்கம் என்பன அரசியலமைப்பு மூலம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.”

“ஏட்டில் இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் மனதில் அது இல்லாவிட்டால், அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் மாற்றம் அடைவதாயின்?......”

“அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும், வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கும், கொள்கைகளையும் கோட்பாடுகளையும்

செயற்படுத்துவதற்குமே அரசியல் அதிகாரத்தை வழங்க வேண்டும்."

"அவ்வாறு நடைபெறாத பட்சத்தில்?"

பொதுமக்களும் மேற்படி அரசியல் செயற்பாட்டில் செயற்பட்டுக்கொண்டிருத்தல் மிக மிக அவசியமாகும்."

"கட்சி அரசியலைக் கூறுகின்றீர்களா?"

"இல்லை! இல்லை! சாதாரண மனிதனின் தேவைகளையொட்டி விழிப்புடன் இருத்தல் வேண்டும். பேச வேண்டும். பங்கேற்க வேண்டும். பொது அரசியல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்."

# 6. நல்லாட்சி மனித உரிமையாகும்

“சாதாரண மனிதன் அவ்வாறு செயற்பட முடியுமா? இவ்வுரிமை எங்கிருந்து கிடைக்கின்றது?”

“உண்மையில் இவ்வுரிமை இயல்பாகவே இருக்கின்றது. இது ஓர் மனித உரிமையாகும்.

“மனித உரிமைகள் பிரகடனத்தில் எடுத்தக் காட்டப்பட்டுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் முழுமையாக எய்தக்கூடிய சமூக சர்வதேசிய நாட்டிடை அமைப்பு முறைக்கு ஒவ்வொருவரும் உரித்துடையவராவர்.

(மனித உரிமைகள் பிரகடனத்தின் 28வது உறுப்புரை)

“இவ்வாறு உருவாக்கக்கூடிய செயல்முறை கிடையாதா?”

“ஏன் கிடையாது? அதுவும் மனித உரிமையாகும். நாம் எல்லோரும் ஆட்சியில் பங்குபற்ற முடியாது. எனவே, எமது சார்பில் ஆட்சி செய்யப் பிரதிநிதிகளை நியமிக்கின்றோம். நாமும் பிரதிநிதிகளாக நியமனம் பெற முடியும்.ஆனால், நேர்மையான தேர்தல்கள் மூலம் தான் அவர்கள் நியமனம் பெற வேண்டும்.”

“பிரதிநிதிகளாக நியமனம் பெற்ற பின்னர் உரிய முறையில் நடக்காவிட்டால்?”

“நியமிப்பவர்களும் விழிப்பாக இருத்தல் வேண்டும். ஆட்சியின் அடிப்படை பொது மக்களின் விருப்பமாக அமைதல் வேண்டும் என்பதையிட்டு விழிப்பாக இருந்து குரல் எழுப்ப வேண்டும்.”

“சொல்வது எளிது, செய்வது கடினம்.”

“அத்தகைய சந்தர்ப்பத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.”

## நல்லாட்சி இருப்பின்

“இங்கு கூறப்பட்டவாறு நல்லாட்சி நிலவினால் அதனை நாம் எவ்வாறு உணர்வோம்?”

“அது எமது வயிற்றைப் போன்றது, வயிற்றில் ஒரு நோய் ஏற்பட்டால் வயிறு இருப்பதை நாம் உணர்வோம். வயிறு நன்றாகச் செயற்படும்போது அது இருப்பதை நாம் உணரமாட்டோம். நல்லாட்சியும் அப்படித்தான். ஆட்சி இருக்கும்; ஆட்சி செய்வது எமக்குத் தோன்றாது.”

“அது எப்படி நடக்கும்?”

“அனைவரதும் சிறந்த பங்களிப்பு இருக்கும்”

“அப்போதுதான் நிலைபேறான அபிவிருத்தி - இடையில் முறிந்துவிடாத உண்மையான அபிவிருத்தி ஏற்படும்.”

“அனைத்து ஆட்சி முறைகளும், வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருக்கும். ஒளிவு மறைவு இருக்காது.”

“வளங்கள் வீண்விரயமாக்கப்பட மாட்டாது” பிரயோசனமான முறையில் ஈடுபடுத்தப்படும்.”

“அப்போது தான் சமத்துவமும் சமநீதியும் ஏற்படும்.”

“அப்போது எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள முடியும்.”

“அதே சமயம் சட்டத்தை மீறி எவரும் செயற்பட முடியாது.”

“சேவைக்கே முதலிடம் வழங்கப்படும். தனிநபர்களுக்கோ கட்சிக்கோ முதலிடம் வழங்கப்பட மாட்டாது.”

“அத்தகையதோர் ஆட்சி எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் சட்டரீதியான ஆட்சியாக அமையும்.”

“நல்லது, இப்படியான நல்லாட்சி ஒரு நாட்டில் நிலவாது போயின் என்ன நடக்கும்?”

“அப்போது கற்பனை செய்து பார்க்க முடியாதளவு விபரீதமே ஏற்படும்.”

## நல்லாட்சி இல்லாதுவிடின்

“அந்த நாடு தோல்வி கண்ட உடைந்த ஓர் அரசாக மாறிவிடும்.”

“ஆட்சி முறை இல்லாதொழிக்கப்பட்டு ஓரிடத்தில் ஆட்சி குவிமையப்படுத்தப்படும்.”

“அப்போது தான்தோன்றித்தனமான ஓர் ஆட்சி உருவாகி மனிதச் சுதந்திரம் இல்லாதொழிக்கப்படும்.”

“குற்றச் செயல்கள் அதிகரித்து சட்டத்தின் ஆட்சி இல்லாத தண்டனை முறை அமுலுக்கு வரும்.”

“ஆயுதக் கோஷ்டிகள் உருவாகி, ஆட்சி அவர்களின் கைகளுக்குச் செல்லும்.”

“அரச ஆட்சி நிறுவனங்கள் செயலிழந்து சுகாதாரம் கல்வி என்பன சீரழியும்.”

“பொருளாதார அபிவிருத்தி எவ்வாறு ஏற்படும்?”

“பொருளாதாரப் பலமும் முதலீட்டுச் சந்தர்ப்பங்களும் ஒரு சிலரது கைகளில் குவியும்.”

“ஊழல்கள் மோசடிகள் என்பன ஸ்தாபன ரீதியாக இடம்பெறும்.”

“ஒரு நாடு இவ்வாறு சீரழிந்தால் அந்நாட்டில் வாழ்ந்தும் பயன் இல்லை.”

# 7. நல்லாட்சியின் பண்புகள்

“இந்நிலமைகளுக்கமைய, நல்லாட்சி என்பது அரசாங்கம் மாத்திரம் செய்யும் ஒரு விடயம் அல்ல.”

“ஆம். அனைவரின் நன்மைக்காக சகலரும் ஒன்றிணைந்து ஆட்சிக்கு உட்பட நடக்கும் ஒரு திட்டமாகும்.”

“மெத்தச் சரி, இத்தகைய நிலைமையை ஏற்படுத்தத் தகுதிவாய்ந்த ஆட்சியை உருவாக்குதல்.”

“அவ்வாறாயின், உண்மையான ஜனநாயக முறைமையென்பதற்கு வெளிப்படையாகக் காணும் பண்புகள் யாவை?”

“பொதுமக்கள் மாண்புடன் வாழக்கூடியவாறு சகல உரிமைகளையும் சுதந்திரங்களையும் உறுதிப்படுத்துதல்.”

“மனிதர்களின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய தீர்மானங்களையிட்டு கருத்துக்களைத் தெரிவிக்கும் வசதி இருத்தல் வேண்டும்.”

“தீர்மானங்களை மேற்கொள்பவர்களுக்கு ஒரு பொறுப்பு உண்டா?”

“உண்மையில் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.”

“மக்கள் பங்கேற்க வேண்டுமா?”

“ஆம் சந்தேகமின்றி நிறுவன - நடைமுறைச் செயற்பாடுகளின் போது மக்களை பங்கேற்கச் செய்தல் வேண்டும்.”

“தீர்மானங்களை மேற்கொள்ளும்போது ஆண்கள் மாத்திரம் பங்கேற்க வேண்டுமா?”

“இது முக்கியமான விடயம். இங்கு பெண்களுக்கு சம உரிமை இருத்தல் வேண்டும்.”

“செயற்பாட்டின்போது சுதந்திரம் எனக் கருதப்படுவது யாது?”

“தேசிய இனம், இனம், வர்க்கம் (வகுப்பு), பால்நிலை, மொழி என்ற வேறுபாடுகள் இல்லாச் சுதந்திரம்.”

“கொள்கைகளைத் தயாரிக்கும் போது இன்றைய தேவைகளை மாத்திரம் கருத்திற்கொள்வதா?”

“இன்றைய தேவைகளை மாத்திரமல்லாது கட்டாயமாக எதிர்காலத் தேவைகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.”

“பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் உண்டா?”

“ஆம் மக்களின் அபிலாசைகளையும் தேவைகளையும் அடிப்படையாகக்கொள்ள வேண்டும்.”

# 8. மாற்றம் இல்லாத மாற்றம்

“இவை எல்லாவற்றையும் எண்ணி நல்லாட்சியை எவ்வாறு வேறு விதமாகக் கூறலாம்?”

“குடி மக்களின் சிறந்த வாழ்க்கை என அறிமுகப்படுத்தலாம்?”

“அவ்வாறாயின் இந்த இரண்டும் இரண்டு வேறு விடயங்களா?”

“இவற்றை இரண்டென வேறு வேறாக விபரிக்க முடிந்தாலும் வேறு வேறாக இருக்கமாட்டாது.”

(உதாரணம் ஒன்றைக் கூறினால் ..........?”

“நடனமும் நடனமாடுபவரும் போல”

## நல்லாட்சி என்பது என்ன?

“ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டக்குழு 1992ல் “வறுமையை இல்லாதொழித்தலும் நிலைபேறான அபிவிருத்தியும் அதன் மோதல் குறிக்கோள்களும்” என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை மூலம், நல்லாட்சியின் பண்புகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன:

1. பிரதேச இனத்துவ - கலாசார பிரதிநிதித்துவம், அமைதியான வழிமுறைகளில் அரசை மாற்றியமைத்தலும், நிறுவனங்களைப் புதுப்பித்தலுக்குமான மோதல் தீர்வுப் பொறிமுறை;

2. நிறைவேற்று அதிகாரத்திற்கான மட்டுப்பாடுகள், பயனுறுதியும் அறிவும் கொண்ட சட்டவாக்கத் துறை, அரசியல் தலைமையும் அதிகாரப் பொறிமுறையும் பொறுப்புடன் செயற்படும் ஒரு செயல்முறை;

3. சட்டம் மற்றும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட அரச பதவிகளை உறுதிப்படுத்தும், பொறுப்புடைமை கொண்ட அரசாங்கத் திட்டங்களில் செயற்பாடும் விழிப்புணர்வும் கொண்ட சிவில் சமூகத்தின் அவசியங்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிக்கும், வெளிப்படையான அரசியல் சட்ட முறைமை;

4. அடிப்படை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை மதிக்கும், தனிநபர்களைப் பேணும் நவீன பொருளாதார சமூக அபிவிருத்தி தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்கு அவசியமான தொடர்ச்சியானதும் வெளிப்படைத் தன்மைகொண்டதுமான சட்டதிட்டங்கள்.

5. சட்டங்கள் ஒழுங்குவிதிகள் உள்ளடங்கிய பொறுப்புணர்வுடன் செயற்படும், தொழில்சார் தகைமையும் ஆற்றலும் கொண்ட, ஏற்புடைமை கொள்கைகள் மற்றும் மக்களின் அவசியங்களை முன்னுரிமைப்படுத்திய நேர்மையான அரச சேவை;

6. சிறந்த நிதி முகாமைத்துவம், செலவினம் பொருளாதார முகாமைத்துவம், நிதி வகைப்பொறுப்பும் முறைமையும் அரச செயற்பாடுகள் பற்றிய மதிப்பீட்டை ஏற்றுக்கொள்ளல்.

7. மத்திய அரசாங்க நிறுவனங்களும் செயற்பாடும் மாத்திரமல்லாது ஏனைய தேசிய உள்ளூராட்சி அதிகார, சபைகள், அரசியல் அதிகாரப்பகிர்வு மற்றும் நிர்வாகப் பன்முகப்படுத்தல் மீது கவனம் செலுத்துதல்.

## நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள்

“நிலைபேறான மானிட அபிவிருத்திக்கான ஆட்சி” என்னும் தொனிப்பொருளில் 1997ல் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நல்லாட்சியின் (9) அடிப்படைப் பண்புகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

1. பங்களிப்பு (Participation) - அவர்களின் தேவைகளுக்காகத் தோற்றும் சட்டபூர்வமான இடைநிலை நிறுவனங்கள் மூலம் அல்லது நேரடியாகவோ அல்லது அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்மானங்களை மேற்கொள்கையில் சகல ஆண்களுக்கும் பெண்களுக்கும் கருத்துத் தெரிவிப்பதற்கான உரிமை இருத்தல் வேண்டும். பேச்சுச் சுதந்திரமும் ஒன்றுகூடும் சுதந்திரமும் ஒருங்கே அமைந்த சிருஷ்டிகரமாகப் பங்கேற்பதற்கு ஆற்றலுள்ள ஒரு சூழலிலேயே மேற்படி பரந்துபட்ட பங்களிப்பு உருவாகும்.

2. சட்டத்தின் ஆட்சி (Rule of law) - சட்டரீதியான நடைமுறைகள் நியாயமாக அமைய வேண்டிய அதேவேளை, அது நடுநிலை நின்று செயற்பட வேண்டும். குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பான சட்டங்கள் அவ்வாறாகச் செயற்பட வேண்டும்.

3. வெளிப்படைத்தன்மை (Transparency) - தடையின்றித் தகவல்கள் பெருக்கெடுக்கும் போதே வெளிப்படைத் தன்மை உருவாகும். நடைமுறைகள், நிறுவனங்கள் மற்றும் தகவல்கள் என்பன மீது ஆர்வம் கொண்டவர்கள் சுதந்திரமாக அவற்றைப் பெறும் வாய்ப்பு இருத்தல் வேண்டும். விஷயங்களைப் புரிந்துகொள்வதற்கும் அவதானிப்பதற்கும் போதிய தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

4. மறுமொழி கூறுதல் (Responsiveness) - நிறுவனங்களும் நடைமுறைகளும் அவற்றிற்கு உரித்துரிமையுடைய சகலருக்கும் சேவையாற்ற வேண்டும்.

5. பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளல் (Consensus orientation) - நல்லாட்சியின் போது பல்வேறு தேவைகளுக்கு இடமளிக்கும் வகையில் பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அனைவருக்கும் அதி உச்ச நன்மை கிடைக்கும் வகையில் சகல சந்தர்ப்பங்களிலும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

6. சமநீதி (Equity) - தமது நல்வாழ்வை அவ்வாறே பேணுவதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு சகல ஆண்களுக்கும் பெண்களுக்கும் சந்தர்ப்பம் இருத்தல் வேண்டும்.

7. பயனுறுதியும் வினைத்திறனும் (Effectiveness and efficiency) - வளங்கள் மூலம் உச்ச அளவு பயனைப் பெற்று, நடவடிக்கை ஏற்பாடுகள் மூலமும் நிறுவனங்கள் மூலமும் உச்ச அளவு பெறுபேறுகளைப் பெற வேண்டும்.

8. வகைப்பொறுப்புக் கூறல் (Accountability) - தீர்மானங்களை மேற்கொள்ளும் - அரச தரப்பினர், தனியார் துறையினர் மற்றும் சிவில் சமூகத்தினர் என்போர் பொது மக்களுக்கும், நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் வகை பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவர்கள். ஆனால் நிறுவனத் தீர்மானங்கள் உள்ளக ரீதியாகவோ வெளிவாரியாகவோ அமையலாம். அதைப்பொறுத்து வகைப்பொறுப்புக் கூறல் வேறுபடலாம்.

9. மூலோபாயத் தொலைநோக்கு (Strategic vision) - நல்லாட்சி மற்றும் மானுட அபிவிருத்தி பற்றித் தலைமைத்துவத்திற்கும் மக்களுக்கும் பரந்த தொலை நோக்கு இருத்தல் வேண்டும். அத்தகைய அபிவிருத்திக்கு அவசியமான உணர்வும் இருத்தல் வேண்டும். வரலாற்று - கலாசார-சமூக சிக்கல்கள் பற்றிய புரிந்துணர்வையும் அடிப்படையாகக் கொண்டே இத்தொலை நோக்கு அமையும்.

# நல்லாட்சியை எவ்வாறு பெறுவது ?

1. ஒவ்வொருவரும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபற்றுவதற்கு உரிமையுண்டு.

2. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரச சேவையில் சமத்துவமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

3. பொதுமக்களின் விருப்பே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பானது, காலாகாலத்தில் நடைபெறும் நேர்மையான தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இத் தேர்தல்கள் பொதுவானதும் சமத்துவமானதுமான வாக்களிப்புரிமை மூலமே இருத்தல் வேண்டுமென்பதுடன், இரகசிய வாக்கு மூலம் அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு நடைமுறைகள் மூலம் நடைபெறுதல் வேண்டும்.

# மனித உரிமைகள் பிரகடனத்தின் 28வது உறுப்புரை

பொதுமக்களுக்கு நல்லாட்சிக்கான உரிமை எங்கிருந்து கிடைக்கின்றது?

“இப்பிரகடனத்தில் (மனித உரிமைகள் பிரகடனம்) குறிப்பிடப்படும் உரிமைகளை மற்றும் சுதந்திரமான உரிமைகளை முழுமையாக அடையக்கூடிய வகையில் சமூக - சர்வதேச அமைப்புகள் கொண்ட ஒரு சூழமைவில் வசிக்கும் உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.”

(மனித உரிமைகள் பிரகடனத்தின் 28வது உறுப்புரை)